# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 79/மா/2017

ஆணை எண். 81/2018

நாள் : 28/03/2018

திரு மு. மனோகரன்,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்

திரு பி. கணேசன்,
முன்னாள் மாமன்ற உறுப்பினர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர், அம்மன் குளம், அண்ணா நகர், எண்.214, 3–வது தெருவில் வசிக்கும் திரு மு. மனோகரன் அவர்களின் 08.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.04.2017 அன்று பெறப்பட்டு, 79/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரின் சாட்சிகள் ஆகியோரிடம் விசாரிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர், அம்மன் குளம், அண்ணா நகர், எண்.214, 3–வது தெருவில் வசிக்கும் திரு மு. மனோகரன் என்பவர் கோயம்புத்தூர் மாநகராட்சி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு P. கணேசன் குறித்து சில குற்றச்சாட்டுகள் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரர் தெரிவித்த சில முக்கிய குற்றச்சாட்டுகள் விவரம் வருமாறு :-

(1) சுமார் 35–40 ஆண்டுகளாக அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டி வாடகைக்கை விட்டு வருவது ;

(2) எதிர்மனுதாரரின் தந்தை மற்றும் தாயார் பெயரில் அரசு புறம்போக்கு நிலத்தை குடிசை மாற்று வாரியம் மூலம் ஒதுக்கீடு பெற்றது ;

(3) எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் S.S.காலனியில் பங்களா கட்டியது ;

(4) எதிர்மனுதாரர் அம்மன்குளம் பகுதியில் உள்ள வீட்டை சொத்துக் கணக்கில் காட்டத் தவறியது ;

(5) 2011–12–ஆம் ஆண்டிற்குப் பின்பு வெள்ளலூர் பகுதியில் பிளாட்டுகள், நிலங்கள் வாங்கியது ;

(6) எதிர்மனுதாரரின் சகோதரருடைய சிற்றுந்தினை எதிர்மனுதாரர் பயன்படுத்தி வருவது ;

(7) அரசு புறம்போக்கு நிலத்தில் எதிர்மனுதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அறைகள் கட்டிப் பயன்படுத்தி வருவதாக ஊரில் பேசிக்கொள்வது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடுகளை தாக்கல் செய்யப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து 2015 – ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள விதிகளில் 4,5 மற்றும் 6 எண்களிட்ட விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி முறையீட்டு மனுக்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்யப்படவேண்டும். மனுதாரரின் மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு உரிய விதிகளின் கீழ் தாக்கல் செய்யப்படவில்லை. முறையீட்டு மனுவினை முறையாக தாக்கல் செய்யப்படாத நிலையிலும், 29.05.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது மேலே கூறப்பட்ட குற்றச் சாட்டுகளை வலியுறுத்திக் கூறியதுடன், எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரினார். ஆனால், முறையான ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2. விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் அவரது குற்றச்சாட்டுகள் அடங்கிய மனு, எதிர்மனுதாரரான திரு P. கணேசன் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்கும்பொருட்டு 20.07.2017 அன்று விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது குற்றச்சாட்டுகள் குறித்து கீழ்க்காணும் விளக்கத்தினை அளித்தார் :-

"2011 முதல் 2016 அக்டோபர் 25 ம் தேதி வரை தான் கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் கணக்கு குழு தலைவராகவும் பணிபுரிந்தேன். அம்மன்குளம் பகுதியில் இருந்து உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டேன். மனுதாரர் கோயம்புத்தூர் குடிநீர் வடிகால் வாரியத்தில் அடிப்படை பணியாளராக வேலை பார்த்து வந்தார். என்னுடைய தம்பியினுடைய மாமனாரும் அங்கு பணி செய்தார். மனுதாரருக்கு குடிபழக்கம் உண்டு. மேலும் அவருக்கு அடிக்கடி புகார் மனு எழுதும் பழக்கமும் உண்டு. அவர் தற்போது ஓய்வு பெற்று விட்டார் ஆனாலும் புகார் மனுக்கள் எழுதும் பழக்கத்தை இன்னும் நிறுத்த வில்லை. தொடாந்து எழுதி கொண்டு தான் இருக்கிறார். 2008 ஆம் ஆண்டு B7 காவல் நிலையத்தில் என் மீது, என் தம்பி மற்றும் அவரது மாமனார் ஆகியோர் மீது தன்னை தாக்க வருவதாக பொய்யான குற்றாச்சாட்டு தெரிவித்திருந்தார். அதற்கு பின்பும் தொடாந்து புகார் மனு எழுதிக் கொண்டு இருக்கிறார். விசாரணை நடந்த பிறகு திரும்ப அதே செய்தியினை வேறு ரூபத்தில் எழுதிக் கொண்டு இருக்கிறார். மனுவில் குறிப்பிட்டுள்ள வீடு குடிசை மாற்று வாரியம் மூலமாக 1990ல் என் தந்தை பெயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 20 ஆண்டுகள் தவணையில் ரூ.27000/– செலுத்தி நாங்கள் வாங்கி உள்ளோம். அதே பகுதியில் என் வீட்டு பின்புறத்தில் தான் மனுதாரரும் குடியிருக்கிறார். அந்த வீட்டிற்கான பத்திரத்தையும் வாங்காமல் அவர் ஒதுக்கீடு செய்த நிலத்தோடு கூடுதல் பணத்தையும் வாரியத்திற்கு கட்ட மறுக்கிறார். குடிசை மாற்று வாரியத்தில் செயற் பொறியாளர் மீதும் புகார் மனு எழுதி அவரையும் மிரட்டி வருகிறார். மற்றபடி என்னைப் பொறுத்த வரை உள்ளூர் அரசியல்வாதி போட்டி பொறமை, உள் கட்சி விவகாரத்தில் எனக்கு மாமன்ற உறுப்பினர் வேட்பாளர் பதிவு கிடைக்க கூடாது என்பதற்கு எனது வீட்டினை படம் எடுத்து குறிப்பிட்ட பத்திரிக்கையில் பிரசுரித்துள்ளார். பல ஒப்பந்ததாரர்கள் மீது இதுபோன்ற புகார் மனுக்கள் அனுப்பி அவர்களை மிரட்டி பணம் வாங்குதே தொழிலாகும். மாமன்ற உறுப்பினராக இருக்கும் போது என்னை மனுதாரர்

அணுகி உங்கள் மீது புகார் மனு அளித்துள்ளேன் தான் ஓய்வு பெற்று விட்டதால் செலவு இருக்கிறது, எனவே எனக்கு ரூ. 3 லட்சம் வேண்டும் என கேட்டார். இதுபோல் பணம் கொடுப்பது இல்லை என மறுத்துவிட்டேன். எந்த வேலை வந்தாலும் ஒப்பந்ததாரர் மீது தொடர்ந்து புகார் அனுப்புவதும் மிரட்டி பணம் கேட்பதும் வாடிக்கையாக கொண்டு இருப்பதால் பெரும்பாலும் ஒப்பந்தாரர்கள் வேலை செய்ய முன்வருவது இல்லை. சிற்றுண்டி கடை நடத்தி வருபவரிடம் (துரை கண்ணு) என்பவர் மீது அவர் பயன்படுத்தும் எண்ணெய் சரியில்லை என்று புகார் செய்துள்ளார். ராஜூ டீ கடையில் பால் சரியில்லை என்று அவரை பற்றி புகார் மனு அனுப்பி அவருக்கு சிரமம் கொடுத்துவிட்டார். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்தும் உண்மைக்கு மாறானது. குடியிருக்கும் என் தந்தை வீட்டை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என தெரிவித்து கொள்கிறேன். இந்த குடிசை மாற்று வாரியத்தில் யார் வீடு கட்டினாலும் அவர் மீது புகார் மனு அனுப்புவது, நேரில் சென்று மிரட்டுவது இவை அனைத்தும் அவர் செய்து வருகிறார். "

3. விசாரணையின்போது எதிர்மனுதாரர் திரு P.கணேசன் குறிப்பிட்ட திரு என். துரைக்கண்ணன் அவர்களிடம் 12.12.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது அவர் தான் அம்மன் குளத்தில் தேநீர் கடை வைத்துள்ளதாகவும் வடை போண்டா, பஜ்ஜி போன்ற பதார்த்தங்களை காலையில் இருந்து மாலை வரை போடுவதாகவும் தெரிவித்தார். மனுதாரர் தனது டீ கடைக்கு வருவார் என்றும் டீ கடையில் உரக்க பேசுவதுடன் திரு. கணேசன் கவுன்சிலரை பற்றி தவறாக பேசுவார் என்றும் குறிப்பிட்டார் வடை போண்டா மற்றும் கடை பராமரிப்பு சரியில்லை என்று காவல் நிலையத்தில் புகார் செய்தார் என்றும் தெரிவித்தார். அவர் ஊரில் உள்ள அனைவரையும் புகார் செய்வார் என்பதால் அவர் சொல்வதை காவல் நிலையத்தில் ஏற்கமாட்டார்கள் என்றும் புது ஆட்டோ வாங்கினாலும், புது கட்டிடம் காட்டினாலும் அவர் புகார் மனு எழுதுவார் என்றும் தெரிவித்தார். 20 நபர்கள் மீது புகார் மனு எழுதி இருக்கிறார். எனவே இவரிடம் யாரும் பேச்சு வார்த்தை வைத்து கொள்ள மாட்டார்கள். மனுதாரர் வீட்டில் தன்னுடைய மைத்துனரை வாடகைக்கு குடி வைத்து இருந்ததாகவும், அவர் மீதும் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து இருக்கிறார். மனுதாரருக்கு மனு எழுதுவதே வேலை. அவர் மகள் வக்கீல் அலுவலகத்தில் வேலை பார்ப்பதால் அவர்களை வைத்து மனு எழுதி உள்ளார். யாராவது கேட்டால் அவர்கள் மீதும் புகார் எழுதிவிடுவார் என்பதால் அவரிடம் யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள். மனுதாரர் குறிப்பிட்டது போன்று எங்களுக்குத் தெரிந்து திரு. கணேசன் எந்த சொத்தும் சேர்க்கவில்லை. மனுதாரரின் பொய்யான மனுவினால் மூன்று நாட்கள் காவல் நிலையம் அலைந்தேன் என்றும், விசாரணையின்போது குறிப்பிட்டார்.

4. எதிர்மனுதாரரான திரு P. கணேசன் குறிப்பிட்ட மற்றொரு சாட்சி திரு D. தங்கவேல் அவர்களிடமும் 12.12.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, மனுதாரர் யாரைப்பற்றியாவது புகார் எழுதும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார் என்றும், அவர் மனநிலை பாதிக்கப்பட்டது போல் செயல்படுகிறார் என்றும் குறிப்பிட்டார். தேநீர் கடைக்குச் செல்லும் அவர், தேநீர் குவளையைக் கழுவவில்லை எனக் குறிப்பிட்டு பொய்ப்புகார் எழுதுவார் என்றும், யாராவது புதுமனை கட்டினாலும் நகராட்சிக்குப் பொய்ப்புகார் எழுதுவார் என்றும் குறிப்பிட்டார் தான் சாட்சி அளித்த விவரம் அவருக்குத் தெரிந்தால் தன்மீதும் புகார் எழுதி தன்னை பாதிப்புள்ளாக்குவார் என அச்சம் தெரிவித்தார்.

5. மனுதாரரின் புகார் மனு, மற்றும் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம், எதிர் மனுதாரர் மற்றும் இருநபர்களின் வாக்குமூலங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர், கோயம்புத்தூர் மாநகராட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினர் குறித்து குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளார். மனுதாரர் தனது குற்றச் சாட்டுகளுக்கு வலு சேர்க்கும் வகையில் சாட்சிகளாக விசாரிக்கப்படவேண்டிய நபர்களின்

பெயர்களை தனது மனுவில் குறிப்பிடவில்லை. மேலும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான ஆவண நகல்களையும், பிற ஆதார விவரங்களையும் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார். எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுகளையும் பிற அரசுத் துறைகள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டு நேர்வுகளையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்வதும் முறையாகாது. விசாரணையின்போது எதிர்மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் இரண்டு நபர்கள் அளித்த வாக்குமூலங்களை இம்முறைமன்ற நடுவம் கூர்ந்தாய்வு செய்தது. மேலும், முறையீட்டு மனுதாரர் தனது குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ள உரிய சாட்சிகளைக் குறிப்பிடவும் தவறியுள்ளார். எதிர்மனுதாரர் அரசு நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமான குற்றச்சாட்டினை நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவு காவல் ஆய்வாளரும் விசாரணை மேற்கொண்டுள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் அளித்த அறிக்கையில் எதிர் மனுதாரர் திரு P. கணேசன் என்பவர் ஆள்மாறாட்டம், போலி கையெழுத்து மற்றும் கைரேகை இடுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு நில அபகரிப்பு எதுவும் செய்யவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர் தனது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் மூலம் எதிர்மனுதாரரான திரு P. கணேசன் மீதான குற்றச்சாட்டுகளை உறுதி படுத்தத் தவறிய நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 11.4.18

11.4.18

11/4/18

பெறுநர்.

1. திரு மு. மனோகரன்,
214, அண்ணாநகர்,
3–வது வீதி, அம்மன் குளம்,
கோயம்புத்தூர்.

2. திரு பி. கணேசன்,
10, அம்மன் குளம்,
அண்ணா நகர், புளியங்குளம்,
கோயம்புத்தூர்.

3. மாநகராட்சி ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்